ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2198/13 - 2020 ඔක්තෝබර් මස 20 වැනි අඟහරුවාදා - 2020.10.20

*2198/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### நீதி அமைச்சு

இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றை வரைதல், பொதுமக்கள் முன்மொழிவுகளுக்கான அழைப்பு

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கான நிபுணர்கள் குழுவிற்கு, அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தில் ஆராய்வதற்காக இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பிற்குப் பதிலாக அரசியலமைப்பிற்கான வரைபொன்றைத் தயாரிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளது என்பது இலங்கை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இது தொடர்பில் ஏதேனும் முன்மொழிவு, கருத்துக்கள் அல்லது எண்ணங்கள் சமர்ப்பிக்க விரும்புகின்ற பொதுமக்களில் எவரேனும் ஒருவர் அதனை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் இக் குழுவின் செயலாளருக்கு முகவரியிட்டு 30, நவெம்பர் 2020 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கலாம் என அறியத்தரப்படுகின்றது.

இதன் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் தயவு செய்து கவனம் செலுத்தவும்:-

1. எல்லாக் கருத்துரைகளும் A4 அளவிலான கடதாசியொன்றில் தட்டெழுத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்தையும் புதிய பக்கமொன்றில் ஆரம்பிக்கவும்:
   - (அ) அரசின் தன்மை
   - (ஆ) அடிப்படை உரிமைகள்
   - (இ) மொழி
   - (ஈ) அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாடுகள்
   - (உ) நிறைவேற்று துறை (சனாதிபதி/அமைச்சரவை/பகிரங்க சேவை)
   - (ஊ) சட்டவாக்க துறை
   - (எ) வாக்களிப்புத் தத்துவம் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்பு உள்ளடங்கலாக தேர்தல்கள்
   - (ஏ) அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல்/அதிகார பரவலாக்கம்/அதிகார பகிர்வு

1A - G 32826 — 29 (2020/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஐ) நீதித்துறை
(ஒ) பகிரங்க நிதி
(ஓ) பொதுமக்கள் பாதுகாப்பு
(ஔ) மேலே குறித்துரைக்கப்படாத அக்கறையுள்ள வேறு ஏதேனும் விடயம்

சமர்ப்பணங்களை இயன்றளவு சுருக்கமாகச் செய்வது விரும்பத்தக்கதாகும்.

சமர்ப்பணங்களை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

**தபால் முகவரி** :
அறை இல. 32, [கட்டிடத் தொகுதி 2],
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,
பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07.

**மின்னஞ்சல் முகவரி** :
expertscommpublic@yahoo.com

செயலாளர்,
புதிய அரசியலமைப்பை வரைவதற்கான நிபுணர்கள் குழு.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.